**an International CBSE Finger Print School**
**Coimbatore**

பாடம் 2. பனைமரச்சிறப்பு

GRADE- IV

QUESTION BANK

## அ) வினாக்களுக்கு விடையளி.

1. **பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

**விடை:**

நுங்கு, பனங்கிழங்கு, பனம்பழம், பதநீர், கற்கண்டு, கருப்பட்டி

2. **சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் எவ்வாறு உதவுகிறது?**

**விடை:**

பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள்

3. **பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?**

**விடை:**

“மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை” இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனங்கொட்டைகளைச் சேகரித்து ஆறு, குளம், குட்டை போன்றவற்றின் கரையோரங்களில் விதைகளை ஊன்றி பனைமரங்களைப் பாதுகாக்கலாம்.

4. **பனைமரத்தின் பயன்களாக நீ கருதுவனவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.**

**விடை:**

- பனைமரம் நீண்டு வளரக்கூடியது.
- நுங்கும், பனங்கிழங்கும் உணவாகப் பயன்படுகின்றன.
- பனை ஓலைகள் கூடைகள் முடையவும், கூரை வேயவும் பயன்படுகின்றன.
- பனஞ்சாறு பதநீராகவும், கற்கண்டாகவும், கருப்பட்டியாகவும் பயன்தருகிறது.
- மேலும், பனைமரம் புயலைத் தாங்கும் வலிமை பெற்றது.
- பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள், ஆகியவற்றைச் செய்து பல்வேறு விளையாட்டுகளை விளையாடலாம்.